# திருச்சி "ஹிந்தி" கூட்டத்தில் குழப்பம்

## நடேசய்யர் திண்டாட்டம்

## தலைவர் யதேச்சாதிகாரம்

### ரெங்க ரெத்தின சாஸ்திரி ஆணவம்.

### மாணவர்கள் ஆத்திரம்.

## ஹிந்தி வீழ்க! தமிழ் வாழ்க! என்ற கூச்சல்.

## சாஸ்திரியார், தலைவர் மன்னிப்பு.

### வோட்டெடுக்காமல் கூட்டம் முடிவு.

(ஒரு நிருபர்)

திருச்சி, அக். 21–

நேற்று திருச்சி நேஷனல் காலேஜ் மைதானத்தில் காலேஜ் பிரின்சிப்பால் தோழர் சாரநாத அய்யங்கார் தலைமையில் ஹிந்தி வார தினம் கொண்டாடப்பட்டது. அப்போது ஹிந்தி கட்டாய பாடமாக்க வேண்டுமா வேண்டாமா என ஒரு தர்க்க வாதமும் நடந்தது. அதில் மாணவர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் புரோபஸர்களும் கலந்து கொண்டார்கள். மாணவர்கள் "தமிழ் வாழ்க" என்னும் சின்னமணிந்திருந்தார்கள். முதலில் ஒவ்வொருவருக்கும் ப் நிமிஷ நேரம் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சாதகமாகத் தோழர்கள் குமில் சுந்தரேசய்யர், எம். ஜி. நடேசய்யர், கணேசன், ஹிந்திப் பிரசாரகர் கிருஷ்ண மூர்த்தி, ரெங்கரெத்தின சாஸ்திரி முதலிய பார்ப்பனர்களும் பாதகமாக தோழர்கள் டேவிட், துரைராஜ், சேலம் மாணிக்கம், சுப்பய்யா, மதுரைநாயகம் பிள்ளை, (சைவ சித்தாந்த சபை) தேவநேச பாவாணர், பண்டிதர் பெரியசாமி பிள்ளை முதலிய தமிழர்களும் பேசினார்கள். ஹிந்தியை ஆதரித்துப் பேசிய தோழர்களுக்கு 10, 15 நிமிஷ நேரமளித்துத் தலைவர் அவர்களுக்கு உற்சாகமும் அளித்து வந்தார். ஹிந்தியை எதிர்த்தவர்கள் பேசும்போது 3 நிஷமானதும் இன்னும் 2 நிமிஷந்தான் இருக்கிறது சீக்கிரம் முடியுங்கள், அதைப் பேசாதே, இதைப் பேசாதே, சரி, நேரம் முடிந்தது என தலைவர் விகடமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இது மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை.

கடைசியாக ரெங்கரெத்தின சாஸ்திரியார் தமிழ்ப் பண்டிதர்களைத் தாக்கி தமிழ்போதனாமுறைசரியில்லையென்று கூறி மாணவர்களை இழிவாகத் தாக்கிப் பேசினார். அவர் விவாத விஷயத்தைப்பற்றிப் பேசாமல் வாயில் வந்தபடி உளறுவதை தலைவர் அனுமதித்ததை மாணவர்கள் கண்டித்துப் பேசினார்கள். தலைவர் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் ஆரவாரித்தார்கள்.

### தலைவர் யதேச்சாதிகாரம்.

தலைவர் லக்ஷ்யம் செய்யாமல் "அது என் இஷ்டம். நீங்கள் பேசாமல் இருங்கள்" எனக் கூறினார்.

"மற்றவர்கள் பேசும்போது குறுக்கிட்டுத் தடுத்தீர்களே. இது என்ன சர்வாதிகாரம்? மன்னிப்புக் கேட்காமல் கூட்டத்தை நடத்தவிட மாட்டோம்" என மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

"ஆம். நான் ஒரு சர்வாதிகாரிதான்" எனத் தலைவர் பதிலளித்தார்.

சாஸ்திரியார்பேச்சைத்தமிழ்ப் பண்டிதர்களும் கண்டித்து மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுபடியும் மாணவர்கள் "ஹிந்தி வீழ்க, ஹிந்தி எங்களுக்கு வேண்டாம், லம்பாடி பாஷை வேண்டாம், எங்களுத் தமிழ்தான் வேண்டும். சர்வாதிகாரி கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வேண்டாம்" என்று கூச்சல் போட்டார்கள்.

தோழர் நடேசய்யரும் வேறு சிலரும் கூட்ட நடுவில் சென்று சமாதானம் சொன்னார்கள். மாணவர்கள் நடேசய்யரைப் பிடித்து அங்குமிங்கும் இழுத்துத் தள்ளி அலங்கோலப்படுத்தினார்கள்.

பிறகு தலைவர் தூண்டுதலின் பேரில் ரெங்கரத்தின சாஸ்திரியார் வருத்தம் தெரிவித்தார்.

மாணவர்கள் "கூடாது மன்னிப்புத்தான் கேட்கவேண்டும்" என்று கூறினார்கள்.

தலைவர் முடிவுரை கூற எழுந்தபோது ஒரே இரைச்சலாக இருந்தது.

உடனேதலைவர் "மக்குகளே! உங்களுக்கு சாதகமாகத்தான் பேசப் போகிறேன். அமைதியாக இருங்கள்" என்று சொன்னார்.

உடனே மாணவர்கள் எங்களை "மக்குகள்" என்று கேவலப்படுத்தியதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் கூட்டம் நடக்காது" என்று ஆரவாரம் செய்தார்கள்.

"ஹிந்தி வீழ்க! தமிழ்வாழ்க" என்ற ஆர்ப்பாட்டம் வானைப் பிளந்தது.

"நான் மன்னிப்புக் கேட்கமாட்டேன். உங்களால் ஆனதைப் பாருங்கள்" என தலைவர் வீறு பேசினார்.

மாணவர்கள் மேடையிலேறி "நீங்கள் மன்னிப்புக் கேட்காமல் முடிவுரை கூறவிட மாட்டோம். நீங்கள்தானே எங்கள் வாத்தியார். நாங்கள் மக்குகளானால் நீங்களும் மக்குத்தானே" என்றுசொன்னார்கள்.

ஒருமணி நேரம் வரை ஹிந்தி வீழ்க! தொலைக! தமிழ் வாழ்க! சர்வாதிகாரம் ஒழிக என்ற முழக்கம் பலமாக இருந்தது.

கடைசியில் தலைவர் பண்டிட் பெரியசாமிப் பிள்ளை, தேவநேச பாவாணர் இவர்களைக் கூப்பிட்டு, தாம் சொன்னதை வாபீஸ் வாங்கிக்கொண்டதாகவும் கூட்டத்தில் அமைதி உண்டுபண்ணும்படிக்கும் வேண்டிக்கொண்டார். அவ்விருவர் முயற்சியினால் கூட்டத்தில் ஒருவாறு அமைதி நிலவியது.

### முடிவுரை.

அப்பால் தலைவர் பேசியதாவது:–

"என்னையும் வேறு சில அறிஞர்களையும் கனம் ராஜகோபாலாச்சாரியார் மாம்பலத்துக்கு அழைத்து ஹிந்தி கட்டாயபாடமாக்குவதைப்பற்றி யோசனை கேட்டார். எனக்கே படிப்பதற்கு கஷ்டமாக இருக்கிறதென்றும் ஹிந்தியைக் கட்டாயபாடமாக்கக் கூடாதென்றும் நான் சொன்னேன். மற்றவர்களும் அப்படியேசொன்னார்கள். கனம் ஆச்சாரியார் லக்ஷ்யம் செய்யவில்லை. ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதாக அகில இந்திய காங்கரஸ் கமிட்டியாருக்குத்தாம் வாக்குக் கொடுத்து விட்டதாகவும் ஆகவே கட்டாய பாடமாக்கித் தீர வேண்டுமென்றும் ஆச்சாரியார் சொன்னார்.

முதல் வகுப்பிலிருந்து 3-வது பாரம் வரை எல்லா பாடங்களும் தாய்மொழியில் போதிக்க வேண்டும். 4-5-6 பாரங்களில் ஹிந்தியும் இங்கிலீஷும் கட்டாயபாடமாக இருக்க வேண்டும். வீணாக என்னை ஒருமணி நேரம் நிற்க வைத்துத் தொந்தரவு செய்துவிட்டீர்கள். என் மேல் ஒரு கல்லும் விழுந்தது" என்று கூறி முடித்தார்.

சாதகமாகவும் பாதகமாகவும் வோட்டு எடுங்கள் என்று மாணவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

"வோட்டு எடுக்க முடியாது" என்று தலைவர் கூறி விட்டார். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

---

கி. மு. 398ம் ஆண்டில் இந்தியா வந்த ஒரு கிரேக்க ஆசிரியர், அக்காலத்தில் இந்தியர்கள் 150 வருடங்கள் வரை ஜீவித்திருந்ததாக தாம் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.